IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

O.S.No. 13 /2024

dated : 11.03.2025

P.W. 2

Name : Samy

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு நான்தான் தகவல் கூறினேன். நானும், வாதியும் 4 ஆண்டுகளாக அறிமுகமாகி பழக்கமாக உள்ளோம். நான் வாதியின் நிறுவனத்தில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். முன்னதாக வாதியிடம் இருந்து பீடி வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தேன். வாதியின் வழக்குரை, அவர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியம் பற்றி விபரம் எனக்கு தெரியும். வாதி டிரேடு மார்க் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி ஆர்.எஸ்.பீடி கம்பெனி நிறுவன உரிமையாளர். 2021 ஆண்டுக்கு பின்னர்தான் வாதியை எனக்கு பழக்கம். வாதி பீடி கம்பெனி தவிர சோப்பு கம்பெனியும் நடத்தி வருகிறார். சுமார் 2 1/2 ஆண்டுகளாக சோப்பு கம்பெனி நடத்தி வருகிறார். நான் வாதி நிறுவனத்தின் தேனி மாவட்ட விற்பனை மேலாளர் என்று முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான். பீடி நிறுவனம் நடத்த வாதி அனுமதி பெற்றுள்ளாரா என்றால் பெற்றுள்ளார். அந்த அனுமதி ஆவணங்களை பார்த்துள்ளேன். நான் தொழிற்கல்வி படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும். 2017 ம் ஆண்டிலிருந்து வாதி பீடித்தொழில் நடத்தி வருகிற விவரம் எனக்கு தெரியும். 1 ம் பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாது. ஜி.எஸ்.டி மற்றும் நிறுவனச் சட்டத்தில் வழங்கப்படும் ஆவணங்கள் பற்றிய விவரங்கள் எனக்கு ஓரளவு தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஜி.எஸ்.டி பதிவெண் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் கண்ட பதிவெண்

சோப்பு நிறுவனத்திற்குரியது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2, 3 ஐ பற்றி எனக்கு தெரியாது. வாதி நிறுவனத்திற்கு தேனி மாவட்டத்திற்கு நான் மட்டும்தான் விற்பனை மேலாளர் தேனி மாவட்டத்தில் ஒரு பகுதியில் பீடி விற்பனையை கவனிக்க தற்போது ஒருவரை நியமித்துள்ளேன். பீடி உற்பத்தி தொழில் பற்றி எனக்கு தெரியாது. பீடித் தொழில் தொடர்புடைய அரசு சலுகைகள் எதையும் நான் பெறவில்லை. பிரதிவாதி பீடித் தொழிலால் வாதியின் பீடி விற்பனை எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு என்று என்னால் குறிப்பிட்டு கூற இயலாது. என் மீது 1ம் பிரதிவாதி புகார் கொடுத்து அதனடிப்படையில் கம்பம் தெற்கு காவல்நிலையத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தகவலறிக்கையை நசித்திடக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதி மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் பிரதிவாதி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மேல்நடவடிக்கைக்கு தடை உத்தரவு பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்ன காரணத்திற்காக தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது என்றும் தெரியாது. வா.சா.ஆ.10 ல் வெற்றிலிங்கபுரம் என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் வா.சா.ஆ.11 ல் மேற்கண்ட விவரம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆர்.எஸ். கோல்டு பீடு என்றும் வா.சா.ஆ.11 ல் நம்பர் 1 ஆர்.எஸ். கோல்டு பீடி என்றும் உள்ளது. வாசிக்கும்போது உச்சரிப்பு வேறுபாடு இருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ல் கட்டு 20 என்ற விவரம் பச்சை வர்ணத்திலும், வா.சா.ஆ.11 ல் கட்டு 20 என்ற விவரம் சிவப்பு வர்ணத்திலும் உள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு பீடி கட்டிலும் அதன் எண்ணம் 20 என்று குறிப்பிடப்பட்டிருக்கும். எல்லா பீடி கட்டுகளிலும் 20 எண்ணம் என்றுதான் இருக்கும் என்றால் சரிதான். வாதி நிறுவனம் நிறுவனச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தொழிலாளர் நலச்சட்டத்தின் கீழும் வாதி நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்று எனக்கு

தெரியாது. அனஷ் என்பவர் எங்களிடம் பீடி வாங்க மறுத்துவிட்டார் ஏனென்றால் தரம் குறைவாக இதே அடையாளத்தில் வேறு பீடி வருவதால் அதை முதலில் சரிசெய்துவிட்டு பீடியை கொண்டு வாருங்கள் என்று சொல்லிவிட்டார். வா.சா.ஆ.23 ஐ வாதிதான் அச்சடித்துக் கொடுத்தார். அதில் குறிப்பிட்டுள்ள ஜி.எஸ்.டி எண் பீடிக் கம்பெனிக்குரியது. அந்த ஜி.எஸ்.டி என் விற்பனை நிறுவனத்திற்குரியதா தயாரிப்பு நிறுவனத்திற்குரியதா என்று என்னால் கூற இயலாது. வாதிக்கு வணிக முத்திரை எதுவும் சொந்தமாக இல்லை என்றும் நான் வாதிக்கு நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.03.11 15:51:20 +0530